சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்

முனைவர் மா.செல்வராசனுக்கு கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது: ஸ்டாலின் வழங்கினார்

ரூ.10 லட்சம் ரொக்கம், பாராட்டு சான்றிதழ்; வெண்கலத்தாலான கலைஞரின் உருவச்சிலை பரிசு

சென்னை, நவ 8–

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் 2024–ம் ஆண்டிற்கான மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினை முனைவர் மா. செல்வராசனுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார். இன்று தலைமைச் செயலகத்தில் நடந்தது விழா.



சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் மா.செல்வராசனுக்கு விருதுடன் ரூபாய் 10 லட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும், வெண்கலத்தாலான கருணாநிதியின் திருவுருவச்சிலையும் வழங்கி சிறப்பித்தார்.

கலைஞரின் பெருமுயற்சியால் இந்தியாவில் முதன்முறையாகத் தமிழ் மொழியானது 2004–ம் ஆண்டு செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. செம்மொழித் தமிழுக்கெனத் தனித்தன்மையுடன் ஒரு நிறுவனம் தொடங்கப்பட வேண்டும் என்ற கருணாநிதியின் கனவினை நிறைவேற்ற, ஒன்றிய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தியதின் அடிப்படையில், 2006–ல் இந்திய மொழிகளுக்கான ஒன்றிய நிறுவனத்தின் ஓர் அங்கமாக இந்நிறுவனம் அமைக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

21.6.1946–ல் பிறந்த முனைவர் மா.செல்வராசன் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இக்காலத் தமிழ் இலக்கியத்துறையில் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தமிழுலகம் நன்கறிந்த தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் மேற்பார்வையில் பல்கலைக்கழக நல்கை ஆணைய ஆய்வு ஊதியத்துடன் 'பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர்' என்னும் பொருள் குறித்து, சென்னைப் பல்கலைக்கழகத்தில் (1970–1974) ஆய்வு நிகழ்த்தி முனைவர் பட்டம் பெற்றுள்ளதோடு, அருஞ்சிறப்புக்குரிய இந்த ஆய்வு நூலுக்கு தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை முதற்பரிசையும், முழுப் பாராட்டையும் நல்கியுள்ளது.

"இளந்தலைமுறையின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர் என நான் செல்வராசனைக் கருதுகிறேன்" என்ற கலைஞரின் கருத்துமிகு பாராட்டையும் பெற்றவர்.

முனைவர் மா.செல்வராசன், பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர், பாரதிதாசன் கலைகள், பாரதிதாசன் ஒரு பார்வை, இலக்கியத்தில் குறுக்கும் நெடுக்கும், இலக்கியத்தில் மெல்லுரை, நல்லோர் குரல்கள், வைகறை மலர்கள், கிளறல்கள், செம்புலப்பெயல் நீர், முரசொலி முழக்கம், வண்ணச்சாரல் வாழ்த்துக்கதிர் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

73 ஆய்வுகள்

செம்மொழித் தமிழ் வளர்ச்சிக்கு இலக்கிய ஆய்வு, படைப்பு இலக்கியம் என்னும் இரண்டு வகைகளிலும் இவர் ஆற்றியுள்ள தொண்டுகள் மிகவும் சிறப்புக்குரியதாகும். ஆய்வு நெறியாளராகப் பல ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழிகாட்டிய சிறப்புக்குரியவர். இவர் மேற்பார்வையில் நிகழ்ந்த பல்கலைக்கழக ஆய்வுகள் 73. இவற்றுள் 54 ஆய்வுகள் பெரியார், அண்ணா, கலைஞர், பாரதிதாசன், பேராசிரியர் க.அன்பழகன் முதலான திராவிட இயக்கப் படைப்பாளர்கள், அவர்களின் படைப்புகள் பற்றியவை ஆகும். அத்துடன், பல்வேறு தமிழியல் ஆய்வு நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் படைத்தளித்த சிறப்புக்குரியவர்.

இவருக்கு 2024–ம் ஆண்டிற்கான கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினை முதலமைச்சர் இன்று வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஔவை. ந. அருள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன துணைத் தலைவர் சுதா சேஷய்யன், இயக்குநர் இரா. சந்திரசேகரன், பதிவாளர் ரெ. புவனேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 246 பேருக்கு பணி ஆணை : ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, நவ. 8–

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக உதவிப்பொறியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 246 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு வாயிலாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ஆகிய துறைகளில் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 246 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு வாயிலாக பல்வேறு துறைகளில் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கான தேர்விற்கு 13.10.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு, தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தேர்வுகள் நடத்தப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 96 நபர்களும், பொதுப்பணித் துறையில் 42 நபர்களும், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையில் 52 நபர்களும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில் 18 நபர்களும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் 38 நபர்களும், என மொத்தம் 246 நபர்கள் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 20 நபர்களுக்கு முதலமைச்சர் இன்றைய தினம் பணி நியமன ஆணைகளை வழங்கி, வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, க. பொன்முடி, எ.வ.வேலு, வி.செந்தில்பாலாஜி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் பீலா வெங்கடேசன், நகராட்சி நிர்வாகத் துறை முதன்மைச் செயலாளர் தா. கார்த்திகேயன், மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் கே. நந்தகுமார், சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் ஆர்.செல்வராஜ், குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வ. தட்சிணாமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

'சகோதரர்' என குறிப்பிட்டு சீமானுக்கு விஜய் பிறந்தநாள் வாழ்த்து

சென்னை, நவ. 8–

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று தனது 58வது பிறந்த நாளை கொண்டாடுகிறார். சீமானின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது கட்சியினர் இன்று காலையில் இருந்தே சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்களை தெரிவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய்யும் சீமானுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். விஜய் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது:– நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சகோதரர் சீமானுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய்யை கடந்த சில நாட்களுக்கு முன் சீமான் கடுமையாக விமர்சித்து இருந்தார். எங்கள் லட்சியத்திற்கு எதிராக பெற்ற தகப்பனே வந்தாலும் எதிரி எதிரி தான் அதில் தம்பியும் கிடையாது, அண்ணனும் கிடையாது. இந்த பூச்சாண்டி எல்லாம் என்கிட்ட காட்ட வேண்டாம். 2026ம் ஆண்டு என் ஆட்டத்தை யாராலும் சமாளிக்க முடியாது" என்று சீமான் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார்.

சீமானின் இந்த விமர்சனத்திற்கு விஜய் தரப்பில் இருந்து பதிலடி எதுவும் வரவில்லை. தனது மாநாட்டின் போதே யாரையும் தரக்குறைவாக விமர்சிக்கும் அரசியலை தான் செய்யப்போவதில்லை என விஜய் கூறியிருந்தார். அதைக் கடைப்பிடிக்கும் விதமாகவே தன்னை சீமான் விமர்சித்திருந்தாலும் கூட அவரது பிறந்தநாளை ஒட்டி விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார் என்று கருதப்படுகிறது.

பெங்களூரில் இருந்து நெல்லைக்கு காரில் கடத்தி வந்த 25 கிலோ குட்கா பறிமுதல்: 7 பேர் கைது

நெல்லை, நவ. 8–

பெங்களூரில் இருந்து நெல்லைக்கு காரில் குட்கா கடத்தி 7 பேரை கைது செய்த போலீசார் 25 கிலோ குட்காவை பறிமுதல் செய்தனர்.

நெல்லையை அடுத்த தச்சநல்லூர் அருகே உள்ள சிதம்பரநகர் விலக்கு பகுதியில் தச்சநல்லூர் சப்–இன்ஸ்பெக்டர் பழனிகுமார் தலைமையிலான போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக சந்தேகத்திற்கு இடமாக வந்த ஒரு காரை தடுத்து நிறுத்தினர். அதில் இருந்த 7 பேரிடம் விசாரித்தபோது அவர்கள் முன்னுக்குப்பின் முரணாக பதில் கூறினர்.

இதனால் சந்தேகம் அடைந்த போலீசார், அந்த காரை சோதனை செய்தனர். அதில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களான குட்கா சுமார் 25 கிலோ இருந்தன. அவற்றை பறிமுதல் செய்த போலீசார், காரில் வந்த 7 பேரை போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரித்தனர்.அவர்கள், தச்சநல்லூர் கரையிருப்பு கிராமத்தை சேர்ந்த இசக்கிபாண்டி (42), மணிகண்டன் (38), ரகுநாதன் (41), முத்து பட்டன் (28), கணபதிமில் காலனியை சேர்ந்த ரகுநாதன் (41), சுந்தர் கணேஷ் (27), பழைய பேட்டையை சேர்ந்த பண்டாரம் (55), மூன்றடைப்பு அருகே வாகைகுளத்தை சேர்ந்த சுடலை (34) என்பது தெரியவந்தது. இதையடுத்து 7 பேரையும் போலீசார் கைது செய்தனர். தொடர்ந்து நடந்த விசாரணையில் இந்த கும்பல் பெங்களூரில் இருந்து குட்காவை இங்கு கடத்தி வந்தது தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து கடத்தலுக்கு பயன்படுத்திய கார் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த கும்பல் இதற்கு முன்பும் இதே போன்று காரில் குட்கா கடத்தி வந்து நெல்லை மாவட்டத்தில் புறநகர் பகுதிகளான திசையன்விளை, வள்ளியூர் உள்ளிட்ட பகுதிகளிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வினியோகம் செய்து வந்ததும் தெரியவந்தது. இதுதொடர்பாக, கைதான 7 பேரிடமும் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெயர் மாற்றம்

OLD NAME :
SUR NAME : ALOYCIOUS RAJ
GIVEN NAME : RENY RAJ
பிறந்த தேதி : 14/01/1975, முகவரி: 4/19, சுந்தரம் தெரு 5வது சந்து, கொண்டிதோப்பு, சென்னை-600 079, தமிழ் நாடு என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி
NEW NAME :
SUR NAME : ALOYCIOUS RAJU
GIVEN NAME : RENY RAJU
என்று அழைக்கப்படுகிறேன்.
RENY RAJ ALOYCIOUS RAJ

பெயர் மாற்றம்

OLD NAME :
SUR NAME : VARADHARAJALU
GIVEN NAME : SURESH
பிறந்த தேதி : 20/05/1963, முகவரி: S-5, அக்ஷயா ப்ளாட்ஸ், 53 & 55, இருசப்பா தெரு, திருவல்லிகேணி, சென்னை-600 005, தமிழ்நாடு என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி NEW NAME :
SUR NAME : VARADARAJALU
GIVEN NAME : SURESH
என்று அழைக்கப்படுகிறேன்.
SURESH VARADHARAJALU

Document Missing

I, U. Ikram Basha, S/o. Mr. Md. Usman Basha residing at No.24, Appavu Gramani street, Killis road, Chennai - 600002 do hereby inform that I have lost the Original Sale deeds belonging to Mrs. Zubaida Begum W/o Akthar Hussain, residing at No. 55, Triplicane high road, Chennai-600005, while taking the same to handover to advocate at Thirumangalam which were kept in my bag. The list of original documents are:
Original land document No's are: 533 /1908, 3202 / 1982, 4 /1982, 1114/1982. 2044/1986, 2364/1989 in respect to S.No: 46/1A(Part) of Kovalam Village, registered at SRO Thiruporur (94 Cents)
If anyone found the above said documents, Please contact me U. Ikram, over the mobile number 9003289329 or on the above mentioned address.
U. Ikram Basha

பெயர் மாற்றம்

ANKUR MALHOTRA, தந்தை பெயர்: Yashpal Malhotra, பிறந்த தேதி: 30.07.1975, புது எண்.44/39, பழைய எண்.464, பாந்தியன் ரோடு, எக்மோர், சென்னை-600 008, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி ANKUR YASHPAL MALHOTRA
என்று அழைக்கப்படுகிறேன்.
ANKUR MALHOTRA

பெயர் மாற்றம்

SYED ABUTHAHIR, தந்தை பெயர்: Abdhuljappar, பிறந்த தேதி: 31.01.1971, எண்.2/104, தெற்கு தெரு, மஞ்சூர், பரமக்குடி, மஞ்சூர், பாண்டிகண்மாய், ராமநாதபுரம், தமிழ்நாடு-623 707, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி SEIYYATHU ABTHAHER
என்று அழைக்கப்படுகிறேன்.
SYED ABUTHAHIR

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர், மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்

V.பீமராவ், க/பெ வரதன், 212, எல்லையம்மன் கோயில் தெரு, நைனார்குப்பம் கிராமம், செய்யூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம். மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் என்னுடைய சித்தப்பா P.நடராஜ் த/பெ புத்துப்பட்டான் என்பவர் மேற்படி கிராமத்தில் 06.06.1988 அன்று இறந்தார். எங்கள் குடும்பத்தினர் விழிப்புணர்வு இல்லாததால் எனது சித்தப்பா இறப்பை பதிவு செய்யப்படவில்லை. இது தொடர்பாக செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வருவாய் கோட்ட அலுவலரிடம் இறப்பு சான்று கேட்டு இறப்பை பதிவுக்கு விண்ணப்பித்துள்ளேன். இந்த இறப்பு சான்றிதழ் தொடர்பாக யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால், இந்த விளம்பரம் வெளியான 15 நாட்களுக்குள் நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவோ தெரிவிக்கலாம். இல்லையெனில் இந்த மனு மீது உரிய சான்றிதழ் வங்க மேற்படி அலுவலகம் ஏற்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
V. பீமாராவ், மனுதாரர்

MATRIMONY.COM LIMITED
Regd.Off: No.94, TVH Beliciaa Towers, Tower II, 5th Floor, Raja Annamalaipuram, Chennai - 600028.
Website: www.matrimony.com
CIN: L63090TN2001PLC047432

matrimony.com
bharat matrimony

Sl. No.	Particulars	Extract of statement of consolidated unaudited financial results for the Quarter and half year ended September 30, 2024 (Rs. Lakhs except EPS)		
		Quarter ended September 30, 2024 (Unaudited)	Half Year ended September 30, 2024 (Unaudited)	Quarter ended September 30, 2023 (Unaudited)
1.	Total Income from Operations	12,412	25,152	12,808
2.	Net Profit for the period (before Tax, and Exceptional items)	1,718	3,551	1,649
3.	Net Profit for the period before tax (after Exceptional items)	1,718	3,551	1,649
4.	Net Profit for the period after tax (after Exceptional items)	1,316	2,713	1,253
5.	Total Comprehensive Income for the period	1,307	2,687	1,244
6.	Equity Share Capital	1,113	1,113	1,113
7.	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year		28,037	
8.	Earnings Per Share (of Rs.5/-each) (not annualized) - 1. Basic: 2. Diluted:	5.91 5.91	12.19 12.18	5.63 5.63

NOTE:
1. The extract of standalone financial results is as under:

Particulars	Quarter ended September 30, 2024 (Unaudited)	Half Year ended September 30, 2024 (Unaudited)	Quarter ended September 30, 2023 (Unaudited)
Total Income from operations	12,308	24,946	12,692
Net Profit before tax after exceptional items	1,706	3,522	1,620
Net Profit after tax and exceptional items	1,309	2,692	1,218

2. The above is an extract of the detailed format of Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015 (as amended). The full format of the Financial Results are available on the websites of the Stock Exchange(s) and the Company's website at www.matrimony.com and the Stock Exchange(s) websites at www.nseindia.com and www.bseindia.com.
3. The above results were reviewed and recommended by the Audit Committee on November 6, 2024 and approved by the Board of Directors at their meeting held on November 7, 2024 at Chennai.

For and on behalf of the Board of Directors of
Matrimony.com Limited,
Murugavel J
Chairman & Managing Director

Place : Chennai
Date : November 07, 2024

அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்
பதிவு அலுவலகம்: பழைய எண்.11, புதிய எண்.2, பார்த்தசாரதிபுரம், 2வது தெரு, தி. நகர், சென்னை – 600 017
Phone : 044-4953 0954 | Email: abi@afslindia.in | Website: www.afslindia.in | CIN: L65993TN1993PLC024861 | GSTIN : 33AAACA3210D1ZP

30 செப்டம்பர் 2024ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்
(ரூ.லட்சத்தில்)

விவரங்கள்	30/9/2024 முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	30/6/2024 முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	30/9/2023 முடிந்த காலாண்டு (தணிக்கை செய்யாதது)	30/9/2024 முடிந்த அரையாண்டு (தணிக்கை செய்யாதது)	30/9/2023 முடிந்த அரையாண்டு (தணிக்கை செய்யாதது)	31/03/2024 முடிந்த ஆண்டு (தணிக்கை செய்தது)
1. (a) செயல்பாடுகள் மூலம் வருமானம்	-	-	-		-	-
2. (b) இதர வருமானம்	35.77	43.62	44.52	79.39	76.72	183.13
3. மொத்த வருமானம் (1+2)	35.77	43.62	44.52	79.39	76.72	183.13
4. செலவினம்						
மூலதனப் பொருட்கள் உபயோக செலவு	-	-	-	-	-	-
வர்த்தகத்தில் பங்கு கொள்முதல்	-	-	-	-	-	-
மூலப்பொருளின் சரக்குகளில் மாற்றங்கள்	-	-	-	-	-	-
ஊழியர் செலவினம்	6.97	5.31	5.62	12.28	9.94	26.60
நிதி செலவு	0.01	0.42	0.00	0.43	0.00	1.25
தேய்மானம்	0.13	0.09	0.20	0.22	0.40	0.79
இதர செலவினம்	11.86	8.25	17.93	20.11	27.76	45.32
மொத்த செலவுகள்	18.97	14.08	23.75	33.05	38.10	73.96
5. வரி மற்றும் விதிவிலக்கான பொருட்களுக்கு முன் லாபம்/(நஷ்டம்) (3 - 4)	16.80	29.54	20.77	46.34	38.62	109.16
6. விதிவிலக்கான பொருட்கள்	-	-	-	-	-	-
7. வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்) (5–6)	16.80	29.54	20.77	46.34	38.62	109.16
8. வரி செலவுகள்						
நடப்பு வரி	2.75	7.25	9.00	10.00	10.00	29.69
ஒத்திவைக்கப்பட்ட வரி	-	-	-			(65.67)
மொத்த வரி செலவுகள்	2.75	7.25	9.00	10.00	10.00	(35.98)
9. காலத்திற்கான தொடரும் செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்) (7 - 8)	14.05	22.29	11.77	36.34	28.62	145.14
10. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்)	-	-	-	-	-	-
11. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கான வரி செலவுகள்	-	-	-	-	-	-
12. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்)(வரிக்கு பின்) (10-11)	-	-	-	-	-	-
13. காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (9+12)	14.05	22.29	11.77	36.34	28.62	145.14
14. இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி	-	-	-	-	-	-
a(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள்	-	-	-	-	-	-
(ii) பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாதது	-	-	-	-	-	-
b(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள்	-	-	-	-	-	-
(ii)பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாதது	-	-	-	-	-	-
மொத்த இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி	-	-	-	-	-	-
15. மொத்த இதர விரிவான வருமானம்/(நஷ்டம்), நிகர வருமான வரி (13+14)	14.05	22.29	11.77	36.34	28.62	145.14
16. செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு: ஒவ்வொன்றும் ரூ.10/-)	540.00	540.00	540.00	540.00	540.00	540.00
17.ஒரு பங்கு சம்பாத்தியம் (ரூ.)(வருடாந்திரம் அல்ல) அடிப்படை பலமிழந்தது	0.26	0.41	0.22	0.67	0.53	2.69

குறிப்பு:
1. 30 செப்டம்பர் 2024 ல் முடிந்த காலாண்டிற்கான மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கைக் குழுவால் மறு பரிசீலனை செய்யப்பட்டு 07 நவம்பர் , 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
2. 30 செப்டம்பர் 2024 ல் முடிந்த காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பாக சட்ட தணிக்கையாளர்கள் வழங்கப்பட்ட குறுகிய மறுபரிசீலனை அறிக்கை 07 நவம்பர் , 2024 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் பதிவு செய்யப்பட்டது.
3. எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கணக்குகள் ரீகருப் செய்யப்பட்டு மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
4. முதலீட்டாளர்கள் புகார் : காலாண்டு துவக்கத்தில் நிலுவை - இல்லை. காலாண்டில் பெறப்பட்ட மற்றும் நிவர்த்தி செய்யப்பட்ட புகார்கள் - இல்லை. காலாண்டு முடிவில் நிலுவையில் உள்ள புகார்கள் - இல்லை.
5. தனியான ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	30 செப்டம்பர், 2024 அன்று	30 செப்டம்பர், 2023 அன்று	31 மார்ச், 2024 அன்று
ஆஸ்திகள்			
நடப்பு அல்லாத ஆஸ்திகள்			
சொத்து, ஆலை மற்றும் கருவிகள்	1.21	1.13	0.73
முதலீடுகள்	112.36	73.11	89.34
இதர நடப்பு அல்லாத ஆஸ்திகள்	3.31	13.14	1.69
	116.87	87.39	91.76
நடப்பு ஆஸ்திகள்			
ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு இணையானது	1,854.53	1,826.66	1,887.02
இதர நடப்பு ஆஸ்திகள்	82.62	454.18	127.69
	1,937.15	2,280.83	2,014.72
மொத்தம் - ஆஸ்திகள்	**2,054.02**	**2,368.22**	**2,106.48**
சம மற்றும் பொறுப்புகள்			
சமம்			
பங்கு மூலதனம்	540.00	540.00	540.00
இதர சமம்	1,422.45	1,404.59	1,521.12
	1,962.45	1,944.59	2,061.12
நடப்பு அல்லாத பொறுப்புகள்			
கடன்கள்	-	-	-
நடப்பு பொறுப்புகள்			
இதர நடப்பு பொறுப்புகள்	51.88	13.35	15.67
ஒதுக்கீடுகள்	39.69	410.28	29.69
	91.57	423.63	45.36
மொத்த சம மற்றும் பொறுப்புகள்	**2,054.02**	**2,368.22**	**2,106.48**

6. **நிகர லாப நல்லிணக்கம்**
முந்தைய இந்திய ஜிஏஏபிக்கு இணங்க மொத்த நிகர லாபத்தை சமரசம் செய்ததன் மூலம், செபிக்குத் தேவையான முந்தைய ஆண்டின் காலாண்டில் இந்த் ஏஎஸ்க்கு இணங்க மொத்த விரிவான வருமானம் வழங்கப்பட்டுள்ளது:

(ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	தனியானது		
	தணிக்கை செய்யாதது		தணிக்கை செய்தது
	30.09.2024 முடிந்த காலாண்டு	30.09.2023 முடிந்த காலாண்டு	31.03.2024 முடிந்த ஆண்டு
ஜிஏஏபி-ன் படி காலத்திற்கான நிகர லாபம்	14.05	11.77	145.14
கழிக்க :			
இதர விரிவான வருமானத்தில் இயல்பான லாபம்/(நஷ்டம்)			
இந்த் ஏஎஸ்-ன் கீழ் நிகர லாபம் (A)	**14.05**	**11.77**	**145.14**
இதர விரிவான வருமானம்			
வாங்குதல் தொடர்பான பரிவர்த்தனை செலவு ★	-	(209.83)	-
ஈவுத்தொகை தொடர்பான பரிவர்த்தனை செலவு	(135.00)	(108.00)	-
இதர விரிவான வருமானம் (B)	(135.00)	(317.83)	-
இந்த் ஏஎஸ்-ன் கீழ் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (A+B)	**(120.95)**	**(306.06)**	**145.14**

அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்
ஒப்பம்/-
S. சித்ரா
முழு நேர இயக்குனர்
DIN-00292725

இடம் : சென்னை
தேதி : 07/11/2024